சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.35/2023**

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. நிதேஷ் | த/பெ: |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 12.02.2026 | தாலுக்கா: |

முதல் விசாரணை...

நான் தற்போது திருவாரூர் விஜயபுரம் சிட்டி யூனியன் வங்கி கிளையில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன். எங்கள் வங்கியில் சம்மந்தம் மகன் தியாகராஜனுக்கு கணக்கு உள்ளது. அதன் கணக்கு எண் 008001000162164 ஆகும். தியாகராஜன் கடந்த 23.09.2021 ல் வசூலுக்காக எங்கள் வங்கியில் காசோலை ஒன்றை செலுத்தியுள்ளார். காசோலையை போதிய பணமில்லை என திருப்பப்பட்டதால் எங்கள் வங்கியால் தியாகராஜனுக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் குறிப்பாணை வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 28.08.2025 முதல் திருவாரூர் விஜயபுரம் சிட்டி யூனியன் வங்கி கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் இந்த வங்கியில் மேலாளராக சேருவதற்கு முன்பு நடந்த விவரங்கள் நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில்தான் தெரியும். வழக்கு காசோலை தாக்கல் செய்யப்பட்ட விவரமும், திருப்பப்பட்ட விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது. தியாகராஜன் தாக்கல் செய்த காசோலை இந்தியன் வங்கி கிளைக்கு அனுப்பப்பட்டது. போதிய பணமில்லை என திருப்பப்பட்டது. வடிவேலின் கணக்கு பட்டியலை பார்த்தால் தான் பணம் இருந்ததா, இல்லையா என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.